மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதியிலே இருக்கிற வாக்காளர் பெருமக்கள் அத்தனைபேரும் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி மாதிரி இருந்து, அவர்கள் எல்லோரும் விட்டுக் கொடுப்பார்களேயானால் போட்டியின்றியே கூட தேர்ந்தெடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 22, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

22—

ஆம்பூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைத்தல்

*** 33325**—டாக்டர் ஜெ. பரந்தாமன் :*

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி வட்டம், ஆம்பூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டத்தில் ஆம்பூர் என்பது தோல் தொழிலுக்கு புகழ் மிக்கது. மெக்கா லெதர் இன்டஸ்ட்ரி என்று அகில உலகமும் போற்றுகிறது. அத்தகைய சிறப்பு வாய்ந்த தோல் தொழில் நகரமான ஆம்பூர் நகரில், உரிமையியல் நீதிமன்றம் - டிஸ்ட்ரிக்ட் முனிசிப் கோர்ட் - அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து விரைவில் இனிய நல்ல செய்தியை நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவிப்பார்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கனிவான பதிலுக்கு நன்றியைத் தெரிவிக்கும் முன்னர், வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், வேலூரில் ரூபாய் 7 கோடி அளவில் நீதிமன்ற வளாகம் கட்ட அரசாணை வழங்கி, நிதி ஒதுக்கி, பணி துவக்க ஆணையிட்ட கருணைக் கடல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்கி, தமிழகத்தின் பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு மாண்புமிகு சட்ட

1995 மார்ச் 16]

அமைச்சர் அவர்கள் ஆம்பூர் வந்தபோது அங்கே ரம்சான் நோன்பு—நபிகள் நாயகம் குறித்துப் பேசிய உரையை இன்றைக்கும்கூட அங்கே இருக்கிற இஸ்லாமிய மக்கள் நன்றியோடு நினைவு கூர்கிறார்கள். அந்த வகையில் இஸ்லாமிய மக்களுடைய கோரிக்கையையும், வழக்கறிஞர்கள் மற்றும் பல சமூக சேவகர்கள் கோரிக்கையையும் ஏற்கப்படுவதோடு பேரணாம்பட்டு தொகுதியில் கிட்டத்தட்ட 40 ஊராட்சிகளைக் கொண்ட மாவனூர் ஒன்றியம், பேரணாம்பட்டு ஒன்றியம் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இது உதவியாக இருக்கும். கிட்டத்தட்ட 70 கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டிய காலம் குறையும் என்பதால், கனிவான பதிலை அளித்த மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்கி, இந்த ஆண்டே கருணையுடன் பணிகளைத் துவங்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கவிநிலவு தர்மராஜ்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டில் நான்காம் தமிழை அறிவித்து படைக்கும் கடவுள் பிரம்மாவை வென்று, ஆறரை கோடி மக்களுடைய இதயத்திலே நீங்கா இடம் பெற்று, ஆறரை கோடி மக்களை மூன்றரை ஆண்டுக்காலமாக முழு முதல் தலைவியாக நின்று காத்து ஆக்கும் கடவுள் விஷ்ணுவையும் வென்று, அறியாமை இருளை அழித்து, பெண் அடிமையை அழித்து, வறுமையை அழித்து, அழிக்கும் கடவுள் சிவனின் தன்மையையும் வென்று, மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியாக விளங்கிக் கொண்டிருக்கிற பொன்மனத் தலைவி, நான் வணங்கும் நடமாடும் தெய்வம், புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியிலே கொடுமுடி மாநகருக்கு ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. அது விரைவிலே செயல்படப் போவதாக ஏற்கெனவே அறிவித்த மாண்புமிகு அமைச்சரவர்கள் அது குறித்து ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆம்பூர் பற்றிய வினா.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், கொடுமுடியில் குற்றவியல் நீதிமன்றம் - ஜுடீஷியல் மேஜிஸ்டிரேட் கோர்ட் - ஒன்று அமைக்க

உயர்நீதி மன்றத்தின் ஒப்புதலோடு போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதனை வருகிற 8-4-1995 அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஹிஸ் லார்ட்ஷிப் ஜஸ்டிஸ் சிவராஜ் பாடீல் அவர்கள் சட்ட அமைச்சர் அவர்கள் தலைமையிலே தொடங்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினர் சகோதரி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆனந்தன் அவர்களுடைய தொகுதியில், உளுந்தூர்பேட்டையில் உயர்நீதிமன்ற ஒப்புதலோடு ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் - டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் - அமைக்கவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு, அதனையும் விரைவில் தொடங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமையியல் நீதிமன்றத்தை குற்றவியல் நீதிமன்றத்தோடு இணைத்து இன்டகிரேட்டட் கோர்ட் என்று வரக்கூடிய அளவுக்கு ஆம்பூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்பட இருக்கிறதா ? ஏற்கெனவே தனியாக ஒரு உரிமையியல் நீதிமன்றம் ஆம்பூரில் அமைப்பதற்கான செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அதற்கான ஒப்புதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இரண்டு நீதிமன்றங்களும் இணைந்து செயலாற்றக்கூடிய ஒன்றாக இருந்தால் தாங்க முடியாத அளவுக்கு பணிச் சுமை உள்ள கோர்ட்டாக அது அமைந்துவிடும் என்பதால் தனியாக ஒரு முன்சீப் கோர்ட் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல தமிழக அரசு இன்றைக்கு 43 இடங்களில் பேக்கேஜ் ஸ்கீம் என்று எங்கெங்கு ஜுடீஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் இருக்கிறதோ அங்கே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டையும் இணைக்கின்ற ஸ்கீமில் இது வராது. ஆம்பூரில் எக்ஸ்குளூசிவ்லி சிவில் கேஸ்களை மட்டுமே கவனிக்கக்கூடிய டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் - தனி நீதிமன்றம் - உரிமையியல் நீதிமன்றம் அமையும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி வி. ஜி. மணிமேகலை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வரலாறு காணாத வகையிலே நீதித் துறையிலே பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி, அதே நேரத்தில் நீதிமன்றங்களையும் அதிக அளவு திறந்து, விரைவாக வழக்குகளை முடிப்பதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 12 லட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அந்த வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு நம்முடைய அரசிடம் வேறு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்டத்தினுடைய 39 (ஏ)-ன்படி இலவச சட்ட உதவி நல்க வேண்டும் என்பது அரசியல் சட்டத்தின் கட்டளையாகும். அதன்படி, 1977 ஆம் ஆண்டு, போற்றுதலுக்குரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே திட்டம் தொடங்கப்பட்டு, 2 லட்சம் ரூபாய்களை ஒதுக்கி, இலவச சட்ட உதவி ஏழையெளிய சாமானிய மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இன்று நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு அது வெகுவேகமாகச் செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாக, மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) என்ற அந்த முறை, இது வரையிலே 935 இடங்களிலே நடந்து வருகிறது. அது மேலும் வளர்ந்து, வருகிற 22-4-1995 அன்று மதுரையில் ஆயிரமாவது மக்கள் நீதிமன்றத்தை துவக்கும் விழா Himalayan achievement during our Revered Chief Minister Dr. Puratchi Thalaivi அவர்கள் ஆட்சியில் நடைபெற இருக்கிறது. நமது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி His Lordship Mr. Justice K. A. Samy அவர்கள் 22-4-1995 அன்று மதுரையில் ஆயிரமாவது லோக் அதாலத்தைத் தொடங்குகிறார்கள் 'என்பதைத் தெரிவித்து, அதன் மூலம் தேங்கியிருக்கிற இந்த 12 லட்சம் வழக்குகள் முடிவுற இதுவும் ஒரு மார்கமாக அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 23, திரு. சி.